**செய்தி வெளியீடு எண் : 501** **நாள்: 30.03.2022**

# செய்தி வெளியீடு

இன்று சென்னை பெருங்குடியில் உள்ள மாநகராட்சி குப்பைக் கிடங்கு வளாகத்தில் திடக் கழிவு மேலாண்மை தொடர்பாகநடைபெற்றுவரும் பணிகளை பார்வையிட்ட பின்னர், காமன்வெல்த் வளர்ச்சி அலுவலகத்தின் இந்தோ–பசிபிக் பகுதி பொது இயக்குநர் திருமதி ஜென்னி பேட்ஸ் மற்றும் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் அரசு கூடுதல் முதன்மைச் செயலாளர் திருமதி. சுப்ரியா ஸாஹூ, இ.ஆ.ப., ஆகியோர் பிளாஸ்டிக் பொருட்களுக்கான மாற்றுத் திட்டத்தை இன்று பெருங்குடி குப்பைக் கிடங்கு வளாகத்தில் துவக்கி வைத்தனர்.

2. இந்தத் குழு பெருங்குடி குப்பை கிடங்கில் நடைபெற்று வரும் மீள் உருவாக்கப் பணிகளையும், மக்கிப் போன குப்பைகளிலிருந்து உயிரி நிலப்பரப்பு மீட்டெடுத்தல் முறை(Bio–mining) மூலம் பிரித்து எடுக்கும் பணிகளையும் பார்வையிட்டது.

3. ஜனவரி 1, 2019 முதல் மக்காத பைகள் (Non–degradable bags),ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியும் பிளாஸ்டிக் பைகள் உள்ளிட்ட 14 வகையான பிளாஸ்டிக் பொருட்களை தடை செய்து 2018 ஆம் ஆண்டு தமிழக அரசு அறிவிப்பு வெளியிட்டது அனைவரும் அறிந்ததே. இனிவரும் 6 மாதங்களில் காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் தமிழ்நாடு அரசு மற்றும் இங்கிலாந்து அரசு இணைந்து காலநிலை மீள்தன்மையுடன் இணைந்த சூழல் நகரங்களை உருவாக்குவதற்கு, இந்தத் திட்டத்தின் கீழ் இங்கிலாந்து அரசின் தொழில்நுட்ப உதவி மற்றும் ஒத்துழைப்பின் அடிப்படையில் இந்தத் திட்டத்தை இணைந்து செயல்படுத்திடதேவையான அடிப்படை விவரங்களுடன் கூடிய ஒரு அறிக்கையை தயார் செய்ய உள்ளது. இந்தத் திட்டம் பிளாஸ்டிக் மாற்றுப் பொருட்களுக்கான,உறுதியான செயல் திட்டத்தை செயல்படுத்தத்தக்க மற்றும் தகுதியை ஏற்படுத்தக்கூடிய வகையிலான ஒரு செயல்திட்டமாக இருக்கும்.

4. கழிவுகளை சரியாக கையாளதால் ஏற்படக்கூடிய தீமைகளை, குறிப்பாக பிளாஸ்டிக் கழிவுகள், காலநிலை மற்றும் சமூகம், சூழல் அமைப்பு ஆகியவைகளுக்கு எதிராக விடுக்கும் சவால்களை இது விரிவாக ஆராயும்.இந்தப் பிரச்சினைகளை குறிப்பிடத்தக்க அளவில் தீர்க்க மறுசுழற்சி பொருளாதார அணுகுமுறை (Circular Economy) ஒரு உடனடித் தீர்வாக அமையும். இந்தத் துறையில் ஒத்துழைக்க இங்கிலாந்து அரசு இந்தியாவிற்கு தனது முழு பங்களிப்பையும் அளிக்கத் தயாராக உள்ளது.

5. தமிழகத்தில் ஏற்படும் காலநிலை மாற்ற தகவமைப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள 500 கோடி ரூபாய் செலவில் "தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தை", அமைத்து தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. காலநிலை மாற்றத்திற்கான இந்தச் சிறப்பு முயற்சிகள் மூலம் 'டிரில்லியன் டாலர் பொருளாதாரம்' என்னும் இலக்கை நோக்கிய தமிழகத்தின் பயணத்திற்கு இது மிக உதவியாக இருக்கும்.

6. இந்த நிகழ்ச்சியில் திருமதி ஜென்னி பேட்ஸ், காமன்வெல்த் வளர்ச்சி அலுவலகத்தின் இந்தோ–பசிபிக் பகுதி பொது இயக்குநர், சென்னையில் உள்ள இங்கிலாந்தின் துணை ஹை–கமிஷனர் திரு.ஆலிவர் பல்லாசெட், திருமதி. சுப்ரியா ஸாஹு, இ.ஆ.ப., அரசு கூடுதல் முதன்மைச் செயலாளர், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, இங்கிலாந்து தூதரக உயர் அலுவலர்கள், சென்னைப் பெருநகர மாநகராட்சி கண்காணிப்புப் பொறியாளர் உள்ளிட்ட உயர் அலுவலர்களும் பங்கேற்றனர்.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்
சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் (ம) வனத்துறை

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in